


# சுட்டி

51


மே' 85

60 காச

மாத இதழ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

குறிப்பிட்ட படி 31.3.1985 அன்று சுட்டியின் 50 வது வெளியீட்டு விழாவும், தோழமைச் சிறு பத்திரிகைகளுடன் ஆக்க பூர்வமாக கலந்துரையாடலும், முன் கூட்டியே தம் வருகையை அறிவித்து வந்து கலந்து கொண்ட வாசகர்களின் காரசாரமான கருத்தரங்கும், சென்னை, ஸ்டர்லிங் சாலையில் வெற்றிகரமாக நடந்தேறியது.

சிறுபத்திரிகைகளின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் அச்சிடத்தக்க முறையில் 30 சிறுபத்திரிகையாளர்களின் சுய அறிமுகத்துடன் கூட்டம் தொடங்கியது. தோழமை இதழ்கள் கூட்டமைப்பு என்ற புதிய நிறுவனத்திற்குச் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. 50 மாத சாதனையோடு பணி முடிந்தது என்றிராமல் விரிவாகப் பல்வேறு துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் சுட்டி அறம் என்னும் மக்கள் டிரஸ்ட் அமைப்பு வெளியிடப்பட்டது. விழிப்புள்ள சுட்டி வாசகர்களும் தோழமை பத்திரிகையாளர்களும் வழங்கிய கருத்துச் செல்வத்திற்கு நன்றி கூறி, சுட்டி மேலும் பணியைத் தொடர்கிறது.

விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் புதியவர்களை அறிமுகப்படுத்தி விற்பனைப் பெருக்கத்திற்குத் தொண்டாற்றுமாறு அழைக்கின்றோம். சுட்டி வாசகர்கள் தங்கள் ஊரில் உள்ள பிரச்சினைகளை ''எங்கள் ஊரின் எரியும் பிரச்சினை'' என்ற தலைப்பில் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

— ஆசிரியர் குழு.

FREE E- BOOKS , www.thamizham.net.,



# ராஜீவை ஏன் குற்றவாளி என்று அழைக்கக்கூடாது?

கடத்தல் மன்னன் ஹாஜி மஸ்தான்

**கே: "புனித ராஜ்யம்" நடப்பதாகப் பேசுகிறார்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

மஸ்தான்: இதெல்லாம் வெறும் பேச்சு தான். ராஜீவ் என்ன செய்துவிட முடியும். தேர்தலில் வெற்றி பெற ரூ 30 லட்சம் செலவழித்தவர், ஓர் ஓட்டுக்குத் தலா ரூ 19 வீதம் ஒன்றரை லட்சம் ஓட்டுகளை வாங்கியவர், என்ன செய்து விட முடியும். அவர் அதனை ரூ 300 லட்சமாகவே பெருக்குவார். இது தான் எதார்த்தம். மனிதன் தன் குழந்தைகளுக்காகப் பேரக்குழந்தை களுக்காக ஏற்பாடு செய்கிறான். இது தான் நம் அமைப்பு. ஒன்றுமில்லாததற்காக, யாரும் அரசியலில் நுழைந்து விடுவதில்லை.

**கே: இந்த அமைப்பு முறையிலிருந்து விடுதலை இல்லையா?**

1புனிதம் ஏற்பட வேண்டுமானால், ஒரு போலீஸ்காரனுக்கு ரூ 2000 சம்பளம் தருவதில் ஆரம்பியுங்கள். இது ரூ 5000 வரை உயரட்டும். ஆனால் ரூ 300 இல் ஆரம்பிக்கிறார்கள். மாதம் ரூ 300 சம்பளத்தில் ஒரு மனிதன் எப்படி நேர்மையாக இருக்க முடியும். இரண்டு குழந்தைகள் போதும் என்கிறீர்கள். சரி அந்த 2 குழந்தைகளுக்கே பால் கொடுக்க ரூ 300 ஆகிறது. பால் போக, ஒரு போலீஸ்காரர் பிற தேவைகளை, தன் மனைவியின், தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு மனிதன் ஏன் திருடுகிறான்? ஏன் தவறு செய்கிறான்? அவன் வயிறு காலியாக இருக்கிறது பசிக்கும் போது ஒரு மனிதன், எதையும் செய்வான். எவ்வளவு கொடுமையானதையும்! இதைச் சுத்தமாக்குகிறேன், அதைச் சுத்தமாக்குகிறேன். பாங்க் டைரக்டரை மாற்றுகிறேன் என்கிறார்கள் உண்மையில் புனிதமாக்க வேண்டுமானால், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே வழியாகும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கே: உங்களைப் போன்ற குற்றவாளிகளின் அரசியல் நுழைவு பற்றி மக்கள் கவலை கொள்கிறார்களே. அவர்கள் குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?

மஸ்தான்: கறுப்புப் பணமின்றி எந்தத் தேர்தலிலாவது வெற்றி பெற முடியுமென்று நினைக்கிறீர்களா? காங்கிரஸ் கட்சி கறுப்புப் பணம் செலவிட்டிருக்கிறது. ராஜீவ் காந்தியை நீங்கள் ஏன் குற்றவாளி என்று அழைக்கக்கூடாது? அவருக்கு எதிராக எப்படி எந்தத் தீர்ப்பும் வழங்கப்படவில்லையோ அதே போல எனக்கு எதிராகவும் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. மக்களைப் பொறுத்தவரை, என்னை இப்படி அழைப்பவர்கள், வால்மீகியையும், அப்படி அழைப்பது தானே. வால்மீகி பெரிய கொள்ளைக்காரனாக இருந்தவர். ராமாயணம் எழுதினாரே. இன்று மக்கள் அவரை மரியாதையுடன் பேசவில்லையா? மனிதன் மாற முடியும். நன்றி: சண்டே


# ஆஸ்துமாதானே!

இனி கவலையே வேண்டாம்!
ஆஸ்துமாவும், ஈஸ்னோபீலியாவும் வியக்கத்தக்க வகையில் சுகமடைய, இலவச ஆலோசனை பெற, கடிதம் எழுதுங்கள்.

முகவரி:
நாட்டு வைத்தியர்
டாக்டர். சி.கே. மாணிக்கவாசகர்,
செலந்தம்பள்ளி போஸ்ட், திருப்பத்தூர் தாலுகா,
வ.ஆ. — 635 653.

குறிப்பு: முழு விளக்கங்களை 1.5.1985 தேதியிட்ட மஞ்சரி அல்லது துக்ளக் இதழ்களில் பாருங்கள். மே 1985 — ரயில்வே கைடிலும் எமது விளம்பரத்தைக் காணலாம்.


FREE E- BOOKS , www.thamizham.net.,



# புதிய நந்தன்கள் புறப்படுகிறார்கள்

ந. க. துறைவன்

பதினைந்து வருடங்களாக திருத்தணி உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலைப் பார்த்து வரும் பெரியசாமி, தன் கிராமத்திலிருந்து 25 மைல் தொலைவிற்கு அவரும், இரண்டு பையன்களும், பெண்ணும் தினமும் டவுன் பஸ்சில் நகரத்திற்குத் தான் வர வேண்டும். இதற்கான இரட்டிப்பு செலவினங்கள் வேறு அவரை வருத்தியது.

சக ஆசிரியர் ஒருவரிடம் "நகரத்திற்குள் பழைய வீடு நல்ல விலைக்கு கிடைக்குமா விசாரிச்சு சொல்லுங்களேன்" என்று கேட்டு வைத்தார்.

மாதங்கள் சில கழித்து. அந்த நண்பர் "சார், ஊருக்குள்ளே கம்மாளீத் தெருவிலே பழைய வீடு ஒண்ணு விலைக்கு வருது போய் பாருங்க" என்றார்.

பெரியசாமி போய் பார்த்தார், பேரம் பேசி படிந்த விலைக்கு வாங்கி, பத்திரமும் எழுதி விட்டார்.

அத்தெருவாசிகள் சிலர் பழைய வீட்டுக்காரரிடம் சண்டை போட்டார்கள். "வீட்டை விக்க அரிஜன்தானா கிடைச்சான் நாங்க இங்கே குடியிருக்கவா இல்லே காலி பண்ணிட்டு சேரிக்கு போகவா சொல்லுங்க" என்றார்கள்.

"ஏங்க அவரும் மனுஷன்தானே நாம எப்படி சொந்த வீடு, நிலம், நீச்சுன்னு இருக்க நினைக்கிறமோ? அது என்னோட சொத்து நா யாருக்கு வேணுமின்னாலும் விக்க உரிமை இருக்கு நீங்க கேட்க யார்?" என்று முகத்தில் அடித்தாற் போல சொல்லி விட்டார்.

தெருவாசிகள் கிராம கர்ணம், கிராம அதிகாரி, ஊர் பெரியவர்கள் ஆகியோரை அணுகினர். அவர்களும் விசாரித்தார்கள், எச்சரித்தனர், மிரட்டினர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெரியசாமி மனங்கலங்கவில்லை. இதயம் மட்டும் எரிமலையாக கொதித்தது. "சுதந்திரம் வாங்கி முப்பத்தேழு ஆண்டுகள் ஆகுது. அரிஜன் முன்னேற்றம், மனித உரிமை யென்று வாய் கிழிய பேசுறாங்க. இங்கே வாடகைக்கு வீடு கேட்டா விட மாட்டேன்கிறாங்க வாங்கின சொந்த வீட்டிலேயும் குடியிருக்க அனுமதிக்க மாட்டேன்கிறாங்க. சாதியின்னடா சாதி பாழாப் போன சாதி என்ன மனுஷன்கள் என்ன சுதந்திர நாடிது" என்று நினைத்து வேதனைப் பட்டார்.

நாட்கள் பறந்தன. வக்கீல் ஒருவரை அணுகினார். அவரின் சட்ட ஆலோசனைக்கு பிறகு அந்த வீட்டிற்கு குடி வந்து விட்டார். தெருவாசிகள், ஊர் மக்கள் மலைத்துப் போனார்கள். மாணவர்கள், வாலிபர்கள் பலர் பெரியசாமிக்கு ஆதரவாக நின்றனர்.

இனிவரும் எந்த அசம்பாவிதங்களையும் சந்தித்துப் போராடவும் தயாராகி விட்டார் பெரியசாமி. ●●


**சுட்டி சந்தா**

சுட்டி சந்தா: 12 இதழ்கள் [illegible] ரூ 7.00 [illegible]

**சுட்டி முகவரி**

[illegible] சுட்டி 149/. [illegible] சென்னை 600 040

**முன் இதழ்கள்**

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 17, 19, 21 22, 26, 30 தவிர 7 பிற இதழ்கள் [illegible] கிடைக்கும்

[illegible] 45 [illegible] அனுப்பினால் [illegible]

**சுட்டி இலவசம்**

சுட்டி இலவசம். [illegible] ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். [illegible] எழுதி அனுப்பலாம்.

**சுட்டி வரவில்லை**

சுட்டி [illegible] 18 ஆம் தேதிக்குள் சுட்டி [illegible] பெற [illegible] மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.


FREE E-BOOKS , www.thamizham.net.,

# நாய்க்கடி



## முதலுதவி

உலகிலேயே நாய்க்கடி சாவு இந்தியாவில் தான் அதிகம். சுமார் 7 லட்சம் பேர் இந்தியாவில் வெறி நாய்க்கடிக்கு ஆளாகித் தடுப்பூசி போட்டுக் கொள்கிறார்கள். அவர்களில் ஆண்டுதோறும் 11,000 பேர் உயிரிழக்கிறார்கள். வெறி நாய்க் கடியால் RABIES படும் துன்பங்கள் காண சகிக்க முடியாதவை. கடிப்பட்டவர்கள் உடலில் வெறி நாய் விஷக் கிருமிகள் பரவி விட்டால், அவர்கள் நாயைப் போலவே குலைத்துக் கொண்டு ஊர்ந்து, சுருண்டு, புரண்டு புரண்டு உயிர் விடுவது மிகக் கொடூரமான காட்சி.

இந்த வெறி நாய்க்கடி பரவாமல் இருக்கவும், வெறி நாய் கடித்து விட்டால் முதலுதவி செய்யவும் சில ஆலோசனைகள்.

(1) இது பரவாமல் தடுக்க ஒரே ஒரு வழி, வெறி நாய்களைக் கொன்று விடுவது தான். உரிமையாளர் இல்லாத தெரு நாய்கள் இந்தியாவில் பல கோடிகள் இருக்கின்றன. அவற்றின் இனம் பெருக விடாமல் ஆங்காங்கே நகராட்சி, ஊராட்சி நிறுவனங்கள் அவற்றைப் பிடித்து மின் அதிர்ச்சி முறையில் சாகடிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. சென்ற ஆண்டு பம்பாயில் 41,000 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டன. 1826லேயே நார்வே, ஸ்வீடன் நாடுகள் தெரு நாய்களை அழித்து வெற்றி கண்டன. மலேஷியா 1950ல் முற்றும் ஒழித்து விட்டது. நாமும் அவ்வாறே செய்தாக வேண்டும்.

(2) வெறி நாய் கடித்து விட்டால் 21 நாட்கள் வயிற்றில் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். வெறி நாய்க்கடி பட்டவர்களுக்கு தொண்டையில் விழுங்க முடியாத படி வலியிருக்கும். தண்ணீர் என்றாலே ஒரு பயம் HYDROPHOBIA. மூச்சுக்குழல் நெருங்கி சுவாசம் தடைப்படுகிறது. எனவே, நாய் வளர்ப்பவர்கள் அனைவருமே வெறிநாய் தடுப்பூசி போட்டுக் கொள்வது நலம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

3 வெறி நாயோ, வளர்ப்பு நாயோ எது கடித்தாலும் உடனே சுத்தமான கத்தியால் கடித்த இடத்தைச் சுரண்டி சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். மேல் பூச்சு மருந்து எதுவும் பூச வேண்டாம். சுத்தமான துணியால் கட்டு போட்டு உடனே மருத்துவரிடம் எடுத்துச் செல்லவும். — சுட்டி பாரதி


புதிய எழுச்சியுடன் நடைபோடுகிறது!

**வெல்டைப் ஃபௌண்டரி**

● அச்சுத் தொழிலில் ஈடுபடுவோர்க்கு எல்லா வகையிலும் நம்பகமான துணைவன். ● எல்லா மொழி அச்சு எழுத்துக்கள் ● அச்சக உபகரணங்கள்.

தொடர்புக்கு: 38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7.
தொலைபேசி: 664293.

உங்கள் புத்தகங்களுக்கு மேலட்டை டிசைன்களை ஸ்கிரீன் பிரிண்டில் அச்சிட,

**சுபஸ்கிரீன்**

2/13, விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை,
சென்னை-600041.

தொலைபேசி எண்: 411414.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்

புத்தக பிரிவு




(ஒரு நவீன ஆப்பிரிக்க
இலக்கியத் தொகுப்பு)
தமிழில்
இந்திரன்
வெளியீடு: அன்னம் (பி) லிட்.
சிவகங்கை — 623 560

விலை ரூ 8/— 142 பக்.

இனவெறி என்னும் கொடிய அரக்கனால் கறுப்பர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட ஆப்பிரிக்கர்களின் உள்ளத் துடிப்பினைப் புலப்படுத்த முயலும் தொகுப்பு முயற்சி. 2 கட்டுரைகள் + 2 நாடகங்கள் + 4 சிறுகதைகள் + 29 கவிதைகள் அடங்கிய புதிய பேழை. 32 இலக்கியச் செல்வர்களின் 37 படைப்புகள்.

இந்தத் தொகுப்பு முயற்சிக்குத் தூண்டுகோல்:

காலனி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட எந்த பண்பாட்டு நாசங்களைச் சரி செய்ய நவீன ஆப்பிரிக்க இலக்கியம் முயல்கிறதோ, அதே பண்பாட்டு நாசங்களுடன் நம் தமிழ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

மக்கள் விசாரணையற்று, வெந்து போன மீன்களைப் போல வாழ்ந்து வருவது புரியத் தொடங்கியது. நம் ஜன்னல்களை உடனடியாகத் திறந்து விட வேண்டிய அவசியம் உறைத்தது.

நாம் நமது ஜன்னல்களைத் திறந்து வைப்போம். அப்போது தான் வெளியே மழை பெய்கிறதா, வெயில் காய்கிறதா என்பது தெரியும். வெளியிலுள்ள நறுமணங்களும், பறவைகளின் பாடல்களும், அவதிப்படுவோரின் அழுகுரலும், நம்மை யாரோ வெளியிலிருந்து அழைக்கிறார்கள் என்ற உண்மையும் புலப்படும். வெளி உலகத்தைப் பற்றித்தெரிந்து கொண்டோமானால் இந்த மொத்த பிரபஞ்சத்தில் நமது இடம் எது என்பது தெளிவாகி விடும்.

"வேலை" என்னும் நாடகம், வேலை தேடி வெள்ளையர்களிடம் ஏமாந்த கறுப்பு இளைஞன் கொலை வெறியனாவதையும், சதுப்பு நில மனிதர்கள் உறவினரின் வஞ்சகத்தினாலும், மூட நம்பிக்கைகளாலும் மனைவி உட்பட அனைத்தையும் இழந்து விட்டவனின் மனக் கொந்தளிப்பையும் சித்தரிக்கிறது. இரு நாடகங்களுமே ஏமாற்ற மன உணர்வுகளைத் தெளிவாக சித்தரிக்கின்றன.

ஆப்பிரிக்க உருவம், ஆப்பிரிக்க மக்களாட்சி, ஆப்பிரிக்க சோஷலிஸம் என்றெல்லாம் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை அனைத்துமே, நாங்கள் மீண்டும் மீண்டும் எழுந்து எங்கள் காலிலேயே நிற்பதற்காக நாங்களே உருவாக்கிக் கொண்ட பல உத்திமுறைகள். நாங்கள் எழுந்து தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கி விட்டோமானால் எங்களுக்கு இவை தேவை அற்றவையாகிவிடும். ஆனால் இப்போதைக்கு இவை தேவைப் படுகின்றன.

— நான் குளிக்கப் போவது இல்லை — என்னும் கட்டுரையிலிருந்து.

அயல் இலக்கியம் என்றவுடனேயே மேலை நாட்டு இலக்கியங்கள் மட்டுமே முன் வந்து நிற்கின்றன. நமது சிந்தனைக்கு இத்தொகுப்பு மாறுதலான நல்விருந்தாய் அமைந்துள்ளது. — வெங்கட் — பேரகல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது மிளகு மருத்துவர்

பழந்தமிழகத்து சேர நாடே உலகிற்கு மிளகை அறிமுகப் படுத்திய பூமி. அயல் நாட்டு மிளகாய் அறிமுகமாவதற்கு முன் நம்மவர் காரத்திற்கு மிளகே பயன்படுத்தினர்.

ஒழுகும் சளியா: ஊசி முனையில் மிளகைக் குத்தி தீயில் காட்டுக. புகை வரும். அதனை முகர்ந்தால் ஒழுகும் சளியும் மூக்கடைப்பும் பறந்தோடும்.

பட்சவாதமென்னும் பெராலிசிஸ்சா: இதனைப் பூரணமாக குணப்படுத்த ஆங்கில மருத்துவ முறை திணறுகிறது. ஆனால் நம் மிளகு சுலபமாக குணப்படுத்திக் காண்பிக்கும். 50 கிராம் மிளகைத் தூள் செய்க. அரை லிட்டர் நல்லெண்ணெயில் கலந்து கடுகு திரளும் வரை சிறுதீயில் காய்ச்சி வடிகட்டுக. பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகள் மீது இந்த எண்ணெயைத் தினமும் அழுந்தத் தேய்த்து உருவி விட்டு வந்தால் குணப் படுத்தலாம்.

ஒவ்வாமை என்னும் அலர்ஜியா? ஒத்துவராத உணவால் ஒவ்வாமை ஏற்பட்டாலும், உணவில் விஷமானாலும் மிளகு முறிக்கும். கொஞ்சம் மிளகுத் தூளை ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காக வற்றும்படி காய்ச்சிக் குடித்தால் போதும். உஷ்ணம், அஜீரணம், பேதி, தொண்டைக்கம்மல், சாதா காய்ச்சல் போன்றவற்றிற்கும் இந்நீர் குணமளிக்கும்.

தலைவலி: மிளகுத் தூளை உச்சந்தலையில் நன்றாகத் தேய்த்தால் தலைவலி பறக்கும்.

பல்வலி: ஒரு தேக்கரண்டி அளவு மிளகும், அதே அளவு சர்க்கரையும் சேர்த்து மை போல அரைத்து பல்வலியுள்ள இடத்தில் வைக்கவும். வலி சுகமாகும் வரை செய்க. குணம் உறுதி.

தேள் கொட்டு: 20 மிளகை எடுத்து ஒவ்வொன்றாக மென்று விழுங்குக. விஷம் இறங்கி வலி நீங்கும்.

(அடுத்து நமது தேன் மருத்துவம்) — சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# புற்று நோய்

## கேள்வி-பதில்



• இந்தியாவில் புற்று நோயின் நிலை என்ன?

இந்தியாவில் ஆண்டுக்கு 5 லட்சம் பேர் புற்று நோயால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களில் 3 லட்சம் பேர் இறந்து போகிறார்கள். இந்த நூற்றாண்டின் இறுதியில் அது 10 லட்சமாக அதிகரிக்கும். உலகிலேயே இந்தியாவில் தான் புற்று நோய்ச் சாவு அதிகம். அப்படியிருக்கப் புற்று நோயை அதிகப்படுத்தும் புகையிலை புகைப் பழக்கமும், புலால் உணவும் நாளுக்கு நாள் நம் நாட்டில் அதிகரித்து வருவது வருந்தத்தக்கது.

• குழந்தைகளுக்கும் புற்று நோய் வருமா? வந்தால் என்ன செய்ய வேண்டும்?

புற்று நோய்க்கு வயது வரம்பு கிடையாது. குழந்தைகளுக்கும் வரலாம். ஆனால் தொடக்கத்திலேயே கவனித்தால் முற்றும் குணப்படுத்தி விடலாம்.

குழந்தையின் வளர்ச்சியிலோ, உணவு விழுங்குவதிலோ கணக்கமும் இடர்பாடும் இருக்குமானால் உடனடியாக மருத்துவரை அணுகவும். நிண நீர் சுரப்பிகளின் வீக்கத்தை LYMPHOMA பரிசோதனை மூலம் செய்யும் புதிய முறையை (L.A.A) அடையாறு புற்று நோய் மருத்துவ நிலையம் உருவாக்கியுள்ளது. இங்கே புற்று நோய் வந்த பெரியோர்களுக்குப் புற்று நோய்க் கட்டி இருக்குமாயின் கதிர்வீச்சு RADIATION முறையைக் கொண்டு வெற்றி கண்டிருக்கிறார்கள்.

நோய்க் குறி தென்பட்ட உடனே தாமதியாமல் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும்.

# தமிழ் எங்கு?

தமிழ் ஆட்சி மொழி ஆகி 20 ஆண்டுகளாகியும் ஏன் அரசு அலுவலகங்கள் கூட அதை அமல் படுத்தவில்லை? காரணம் தமிழனுக்கு மொழிப் பற்று என்பது ஒரு சிறிதும் கிடையாது என்பது தான் கசப்பான உண்மை. தாம்பரத்திற்கு அம்பத்தூர் ஆவின் கிளை அலுவலகத்தின் பெயர்ப் பலகையைப் பாருங்கள். வாசனைக்குக் கூட அதில் தமிழ் கிடையாது. ஆவின் பால் உற்பத்தியாளர் இணையம் என்று அழகாக எழுதலாம். இதற்குத் தடையாக இருப்பவர் யார் என்பதைக் கண்டு பிடிக்க அரசாங்கத்திற்கு திராணி இல்லையா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

அப்படியே ஒரு பெயர்ப் பலகைகள் எழுதினாலும் அதில தமிழ்ப் பெயர் சிறியதாக எங்கோ ஒரு மூலையில இருக்கும். சிகரெட் விளம்பரத்தில் அரசாங்க ஆணையை எழுதியிருப்பதைப் போல. ஆங்கிலமே வேண்டாம் என்று யாரும் கூறவில்லை. முதலில் தாய் மொழி தமிழ். பிறகு ஆங்கிலம் என்று தான் கூறுகிறோம். தமிழ்நாட்டின் தலைநகரில ஒரு நாள் பேருந்தில் ஏறிக் கொண்டு அப்படியே பலகைகளைப் பார்த்துக் கொண்டு போங்கள்.

தமிழின், பெருவாரி மக்கள் மொழியின் அலங்கோலத்தை அப்பெயர்ப் பலகைகளில் காணலாம். தமிழ் கேலிக் கூத்துக்கு இடமாக்கப் பட்டிருப்பதை வேதனையோடு ஏற்றுக் கொள்வீர்கள்.

SNACK BAR ஐ ஸ்நேக் பார். ஸ்நாக் பார். ஸ்னாக் இப்படி விருப்பம் போல் எழுதுகிறார்கள். FRIENDS FOOT WEAR என்பதை பிரண்ட் புட் வேர் என்று எழுதுகிறார்கள். எப்படித் தமிழில் எழுதுவது என்பதை இவர்களுக்குச் சொல்ல யாருமே இல்லையா? அங்கு நுழையும் வருமான, விற்பனை வரி, உரிமம் வழங்கும் அலுவலர்கள் கொஞ்சம் கடைக் கண் பார்வை செலுத்தக் கூடாதா? தமிழக அரசின் கீழ் இயங்கும் மொழி பெயர்ப்புத் துறை, தமிழ் வளர்ச்சிக் கழகம் முதலியவற்றின் அதிகாரிகள் இதையெல்லாம் கவனிக்கக் கூடாதா என்று சாமான்யர்கள் கேட்பது நியாயம் தானே?

— சுட்டு பாரதி

# குற்றவாளிகளின் சொர்க்கம்




கொஞ்ச காலத்துக்கு முன்பு வரை அரசியல் என்பது தியாகிகளின் திருக்கோயிலாக இருந்தது. ஆனால் இன்று அரசியலை கொள்ளைக்காரர்கள், கடத்தல்காரர்கள், சமுதாய விரோதிகள், பேட்டை ரவுடிகள் ஒட்டு மொத்தமாக ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இது பீஹார் மாநிலத்தைப் பொறுத்த வரை முற்றும் உண்மை என்பது அங்குள்ள அப்பாவி மக்களுக்கு நன்கு தெரியும். பீஹார் மாநிலத்தின் ஜகதீஷ்பூர் தொகுதியிலிருந்து வந்து கொடி கட்டிப் பறக்கும் பீர் பகதூர் சிங் ஒரு சுயேச்சை எம்.எல்.ஏ. பல முறை சிறைத் தண்டனை பெற்றவர் என்பது தெரிந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதற்குக் காரணம் மக்களின் பயம் என்பதா? அறியாமை என்பதா? பீர் பகதூர் சிங் கையில் நாட்டுத் துப்பாக்கியுடன் தொகுதியில் உலா வருவது சகஜம். ஒருமுறை நடுத்தெருவில் 4 முரட்டர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு ஆட்டை அடித்து, பக்கத்து மிலிடரி ஓட்டலில் சமைக்கச் செய்து ரவுடி கும்பலுடன் விருந்துண்டார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஓட்டல் முதலாளியோ பொது மக்களோ ஒரு வார்த்தை உண்டா? "மூச்" டிகட் பரிசோதகர் டிகட் கேட்டதற்காக ஓடும் ரயிலிலிருந்து அவரைக் கீழே உருட்டிவிட்டார். அதற்காக இவரை ஏழைகளின் காவலர் என்று எண்ணி விட வேண்டாம். பிற்பட்ட வகுப்பினரின் பரம்பரை எதிரி இவர்.

இவர் மட்டுமல்ல; பீகார் சட்ட மன்றத்தில் சாகிர் அகமத், சஞ்சீவ் பிரசாத் தோனி, குமுத் ரஞ்சன் ஜா, ஸஹதேவ், ஹரிலால் ராம், ரகுநாத் பாண்டே போன்ற எண்ணற்றோர் உறுப்பினர் பதவியில் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் எடுத்து விழுங்கிவிடும் பழுத்த குற்றவாளி மாலாதேவியும் சட்டசபை உறுப்பினர். பீகாரில் அரசியல் பலத்திற்கு குண்டர்கள் தேவை என்பது நியாயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் எல்லாருமே இந்திரா காங்கிரஸுடன் கலபமாக இணைந்து அதன் உறுப்பினர்களாகத் திகழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## [illegible]

**துணிவே வெற்றிக்குத் துணை** (7.00) பிரம்மானந்தம் — அநுராகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை — 600 017.

**மேதைகள் தமாஷ்!** (6.00) தொகுப்பு — மயிலை நாதன் — மயிலவன் பதிப்பகம், 7, எம்.கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை — 600 004.

**சித்திர பாரதி பாடல் பாப்பாப் பாட்டு** (1.50) **முரசு** (1.50) பதிப்பாசிரியர் முல்லை தங்கராசன் — திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா ரோடு, தி. நகர், சென்னை — 600 017.

**மேற்கு மலைவாசிகள்** (13.75) — பிலோ இருதயநாத் — முத்துப் பதிப்பகம், 269, கிழக்கு பாண்டி ரோடு, விழுப்புரம்.

**இலங்கைப் பிரச்சனை தீர்வு என்ன?** (2.00) — அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத், 12, ஸ்ரீனிவாச பிள்ளை தெரு, எழும்பூர், சென்னை — 600 008.

**விடுப்புறுதிச் சட்டம்** (11.00) கோ. சேஷாசலம் — நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி. நகர், சென்னை — 600 017.

**சமூகமே கண்விழி!** (2.00) யாழ்ப்பாணம் ச. சுதாகர் — சேகர் பப்ளிகேஷன்ஸ், புஸ்கோ டெய்லர்ஸ், 28, ஐயனார் கோயில் மெயின் ரோடு, செல்லூர், மதுரை — 625 002.

**நாயன்மாரும் சான்றோர் நூல்** (6.00) — மணவை ப. கேசன் — கமலவேணி பதிப்பகம், 'தணிகை' 135, சாந்தி நகர், குரோம்பேட்டை, சென்னை — 600 044.

**பூனைக்கு சில ரோஜாக்கள்** (8.00) என். ஆர். தாசன் — தேவநேயன் அச்சகம், 351, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை — 600 005.

**ஜனனி சந்திரபோஸ்** (3.75) தெ.சி. தெய்வசிகாமணி — பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை — 600 004.

**சர்க்கரை நோயுடன் சுகமாய் வாழ்வு** (7.00) ச.கு. கணபதி — பாரி நிலையம், 184, பிராட்வே சென்னை — 600 108.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வியாதிகள் விற்கப்படுகின்றன.



தூய்மைக் கேடு சத்துணவுப் பற்றாக் குறை, வறுமை இவைகள் தான் இந்தியக் குழந்தைகளின் வியாதிகளுக்குக் காரணம் என்று நினைத்தால் ஓரளவுக்கு உண்மை. பெருநகர்களில் உள்ள பள்ளிகள் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டு சீதபேதி, வயிற்றுப் போக்கு, குடற்சரிவு, காலரா போன்ற தொற்று வியாதிகளை விலைக்கு விற்கும் விற்பனை நிலையங்களாகி விட்டன.. அங்கே, அழுகி ஈக்களுடன் உறவாடும் பழங்கள், அசுத்தமான கிருமிகள் நிறைந்த நீரில் செய்யப்பட்ட பானங்கள், மிட்டாய் இவற்றை மூடிய கதவிடுக்குகளின் வழியே சர்வ சாதாரணமாக விற்கின்றனர். பள்ளி நிர்வாகத்தினர் தட்டிக் கேட்டால் பொது வீதி நீ யார் கேட்பது என்று முகத்தில் அடித்தாற் போல் பதில் காத்திருக்கிறது. சுகாதார அதிகாரிகள் சோதனைக்கு வந்தால் எப்படியோ மோப்பம் பிடித்து ஈ காக்கை கூட அங்கு நிற்பதில்லை. குழந்தைகளுக்கு பஸ் பிரேக் டவுன், திடீரென்று தேவைப்படும் கல்வி உபகரணங்கள் இவற்றுக்காகப் பெற்றோர்கள் கொடுக்கும் பணத்தைக் குழந்தைகள் வியாதியை விலைக்கு வாங்கப் பயன்படுத்தி விடுகின்றன. பள்ளி நிர்வாகம், சுகாதார அதிகாரிகள் தலையிட்டும் ஒழிக்க முடியாத இச்சீர் கேட்டைத் தகர்க்க என்ன தான் வழி? அவசரத் தேவைகளுக்காகக் குழந்தைகளிடம் பணம் வழங்கும் பெற்றோர் கொடுத்த பணத்திற்குச் சரியான கணக்கு அளிக்கும் நற்பழக்கத்தைக் குழந்தைகளுக்குக் கட்டாயமாகப் புகட்ட வேண்டும். வீதிப் பொருட்களின் நச்சுத் தன்மையை எடுத்துக் கூறி சத்துள்ள உணவுப் பண்டங்களைப் பள்ளிக்குக் கொடுத்தனுப்ப வேண்டும். குழந்தைகளை வியாதி எமனிடமிருந்து மீட்க இதுவே வழி.

கார்த்திக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுட்டி அறம்




**இதுவரை எழுத்து வழி மட்டும் இலட்சியத் தொண்டு புரிந்து கொண்டிருந்த, சுட்டி, தன் தொண்டு விழுதுகளைக் கல்வி, சட்டம், மருத்துவம் என்ற விரிந்த பரப்புகளில் விரிவாக்க விரும்புகிறது.**

**குறிக்கோள் ஒன்று : சட்டத் தொண்டு**

அஞ்சல், போக்குவரத்து, மின்துறை, தொலைபேசி, நகராட்சி முதலானவற்றில் அரசாங்கம் புரியும் ஒழுங்கீனங்களும், ஒரு சில தனியாரும், தனியார் அமைப்புகளும் இழைக்கும் அநீதிகளும் கேட்க நாதியில்லாமல் ஒரு வழிப் பாதைகளாக—தான் தோன்றித்தனமாக இயங்கி வருகின்றன. உறங்கும் மக்கள், உரிய உரிமைக்காகப் போராடுவதே இல்லை! குரல் கூட எழுப்புவது இல்லை. பொதுமக்களின் நலனைச் சேதப்படுத்தும் அரசு, தனியார் அதிகங்களின்

நிலைத் தீயானப் பழக்கங்களும் எல்லாரையும் எளிய செலவில் எட்டச் செய்வது.

**குறிக்கோள் நான்கு : செய்தித் தொண்டு**

சுதந்திரத்திற்குப் பிறகு, விதை நெல்லாக இருந்து வந்த ஓரளவு படித்த சமுதாயத்தையும் தமிழ்ப் பத்திரிகைகள் - சமூகச் சாத்தான்களாக மாற்றி, மாறி, சினிமா, அரசியல், விளையாட்டு எனத்திசை மாற்றி விட்டன. ஏழ்மை, வேலை

னைக்காகச் 'சுட்டி அறம்' சொந்தச் செலவில் அறவழக்குத் தொடுக்க வழி செய்யும்

### குறிக்கோள் இரண்டு : கல்வித் தொண்டு

விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகளாகியும், இந்தியக் கல்வித்துறை, நாட்டில் ஞான விழிப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக உறங்கும் குழந்தைகளையும், கிறங்கும் இளைஞர்களையும் பல கோடி செலவில் உருவாக்கியிருக்கிறது. கலாச்சார நிறுவனங்களாக இயங்க வேண்டிய கல்வி நிறுவனங்கள் கறுப்புக் கரங்களால் வியாபார நிறுவனங்களாக மாற்றப்பட்டு விட்டன. இந்த வீழ்ச்சியிலிருந்து கல்வித்துறையை மீட்சி பெறச் செய்யும் முகமாக, முற்றும் தொண்டு நோக்கத்துடன் புதிய மழலைப் பள்ளியைப் புதிய போக்கில் புதிய நோக்கில் உருவாக்கி நடத்துவது.

### குறிக்கோள் மூன்று : மருத்துவத் தொண்டு

அரும்பெரும் இலட்சியங்களை, நோயில் மடிந்து கொண்டிருக்கும் கூனல் சமுதாயத்தால் சுமக்க முடியாது. எனவே, இந்த மண்ணிற்கே உரிய எளிய இயற்கை மருத்துவ முறைகளும், யோகாசனப் பயிற்சிகளும், வரை கடந்த ஆழ்

கொண்டிருக்கும் ...

மடை மாறிடி, பாலுணர்வுக் கனவுகளில் மூழ்கி அழிய, நசிவு இலக்கியங்கள் பாதை சமைத்து விட்டன. இவ்விழிநிலையினின்று படித்த வட்டத்தை மீட்பது சமுதாய முதற்கடமை. எனவே பொழுது போக்கைக் கடைசி நோக்கமாகக் கூட கொண்டிராத, ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு எழுத்தும் வாசகர்களுக்குப் பயன்படவேண்டும் என்ற அக்கறை கொண்டு எழுதப்பட்ட இலட்சிய எழுத்துப் பிரசுரங்களை அடக்கவிலையில் தொண்டு நோக்கில் வெளியிடுவது வெளியிட்டுக் கொண்டேயிருப்பது.

### உங்கள் உதவி :

இந்த நாட்டைச் சுயநலக் கோட்டான்களிடமிருந்து மீட்டே தீருவது, இலட்சியச் சமத்துவ சமரசச் சமூகத்தை அமைத்தே தீருவது, என்ற இலட்சியம் ஈடேறுவது உங்களுக்கும் உடன்பாடான நோக்கங்கள்தாம். எனவே என்னென்ன வழிகளில் எல்லாம், தாங்கள் உதவ முடியுமோ அந்தந்த வழிகளில் உதவுக! உங்கள் உதவி பொருளாகவும் இருக்கலாம்! பொழுதாகவும் இருக்கலாம்!

இங்ஙன்
**சுட்டி அறங்காவலர் குழு**

---

குறிப்பு : உங்கள் காசோலையை "SUTTY ARAM" என்ற பெயரில் எடுக்கவும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கூரிய விமர்சனப் பார்வையில் —



# அண்ணா என்கிற மனிதர்

(இதுவரை படிக்காதவர்களும் படிக்கலாம்)

**அரசியல் கொள்கை:**

அண்ணா எந்த அரசியல் தத்துவத்தையும் புதிதாக உருவாக்கவில்லை. பெரியாரின் அரசியல் கொள்கைகளுக்குத் தெளிவுரை, விளக்கவுரை வழங்கிய உரையாசிரியராகவே அண்ணா விளங்கினார். சுயமாக சிந்தித்து இந்த நாட்டுக்குத் தத்துவங்களை வழங்கிய பேரறிஞர்கள் சிந்தனையாளர்கள் வரிசையில் பெரியாருக்கு இடம் இருப்பது போல அண்ணாவுக்கு இடம் இருக்க வழியில்லை.

"நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத் தான்" என்று பெரியாரைப் பற்றிப் பெருமிதத்துடன் குறிப்பிடும் அண்ணாவின் அடிப்படை அரசியல் கொள்கை பெரியாரிடம் 1935 இல் இணைந்தது முதல் உருப்பெறுகிறது.

அரசியல்வாதியாக அது முதல் பரிணமிக்கும் அண்ணாவுக்கு மூன்று காலக்கட்டங்கள் உண்டு. சுயமரியாதை இயக்கம், தி.க. இவற்றில் பெரியாரின் தளபதியாக பணியாற்றிய 14 ஆண்டுகளே இதில் முதல் கட்டம். இந்த நாட்களில் அண்ணாவின் அரசியல் நிலையை மட்டுமே இப்போது கவனிப்போம். பெரியாருடன் இருந்த இந்த இளைய நாட்களை "எனக்கென்று ஒரு வசந்தகாலம் இருந்தது" என்று பசுமையாக அண்ணா தன் கடைசி நாட்களில் குறிப்பிடுகிறார். காடு மேடெல்லாம் சுற்றி வந்து பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தன் பேச்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சாலும் எழுத்தாலும் பரப்பியது அண்ணாவைப் போல் யாருமில்லை.

இந்தப் பணிக்காக தன்னைக் கடுமையாக வருத்தி உழைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறார் அண்ணா. பெரியாரின் கொள்கைகளைப் பொது மக்களிடத்து மட்டுமன்றி, மாணவர்களிடத்தும், அறிவு ஜீவிகளிடத்தும் எடுத்துச் செல்வதற்கான சகல உத்திகளையயும் கையாண்டு பரிசோதித்திருக்கிறார். இது போன்றதொரு தளபதி இந்தியாவில் எந்தக் கட்சிக்குப் கிடைத்ததில்லை.

அரசியல் பொருளாதார நூல்களைக் கரைத்துக் குடித்தது மட்டுமன்றி அக்காலக் கட்டத்தில் உலகில் நிகழ்ந்த மாற்றங்களையும் அண்ணா கவனிக்கத் தவறியிருக்க முடியாது. இந் நூற்றாண்டில் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான சமூக மாற்றங்கள், இருப்போர் — இல்லாதோர் இடையே முகிழ்ந்த வர்க்கப் போராட்டத்தின் விளைவே என்பது அண்ணாவுக்குத் தெரியாமலிருக்க முடியாது. இத்தகைய இயல்பான போராட்டம் தமிழகத்திலும் நடந்திருக்க வேண்டும்.

இப்படியொரு போராட்டத்திற்குரிய சூழல் இங்கு இருந்தும், அதனை திசை திருப்பி பிராமணர், பிராமணர் அல்லாதோர் போராட்டமாக மாற்றியதற்கு அண்ணாதுரை



FREE E- BOOKS , www.thamizham.net.,

யும், பெரியாரும், அவர்களது தோழர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

இங்கு காலத்திற்கேற்ப ஒரு பொதுவுடைமை இயக்கம் ஆற்றலுடன் தோன்றிவிடாமலிருக்க, பொதுவுடைமையின் கவர்ச்சிகரமான அம்சங்களைத் தாங்களும் ஏற்று செயல்படுவதாக தந்திரமாக மக்களை நம்ப வைத்தார்கள்.

அண்ணா ஒருமுறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பேச சென்றிருந்த போது இரு மாணவர்கள் அவரைத் தனிமையில் கண்டு "உங்களுடைய சொற்பொழிவில் சமதருமம் காணப்படுகிறது. ஆனால் நீங்கள் பதவி வேட்டையாடும் பிற்போக்காளரின் கட்சியில் ஏன் இருக்க வேண்டும்" என்றனர். அந்த இரு மாணவர்கள் இன்றைய இரா. நெடுஞ்செழியனும் அன்பழகனும் தான்!

"அந்தப் பணக்காரக் கட்சியைச் சனநாயக, சமதருமக் கட்சியாக மாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் நீதிக் கட்சியில் இருக்கிறேன்" என்றார் அண்ணா. நீதிக் கட்சியே பின்னர் திராவிடக் கழகம் ஆனது.

உண்மையில் தி.க. சமதரும கட்சியாகவா இருந்தது? சோவியத் பூமியை யுகப் புரட்சி முடிந்து சில ஆண்டுகளுக்குப் பின் தரிசித்து விட்டு வந்த பெரியார் "தனியுடைமை ஒழிகிற ஒரு பொதுவுடமை நாட்டில் கடவுளுக்கோ, மதத்துக்கோ, சாஸ்திரத்திற்கோ வேலை கிடையவே கிடையாது" என்கிறார். சமூக மாற்றத்தின் மூலக் கூறு தனியுடைமை ஒழிப்பு என உணர்ந்தும் மக்களிடையே அந்தக் காலக் கட்டத்தில் எளிதாக பற்றக் கூடிய பார்ப்பனர் எதிர்ப்பு, வட இந்திய எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு என்ற மூன்று கோஷங்களை முதன்மையாக வைத்தே செல்வாக்கை தங்கள் இயக்கத்திற்கு பெரியாரும், அண்ணாவும் திரட்டினர்.

1934 இல் இந்திய கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டதைக் காரணம் காட்டி பெரியார் வர்க்கப் போராட்டத்தைக் கைவிட முடிவு செய்தார். இந்நிலையில் தவறான அடித்தளத்தின் மேல் எழுப்பப்பட்ட இந்தத்

FREE E- BOOKS , www.thamizham.net.,

திராவிடர் கழகம் பொதுமக்கள் ஆதரவைப் பெற்றது எப்படி?

காலங்காலமாக சமூக அமைப்பில் வீற்றிருந்த பிராமணர்கள் மற்ற சாதியினரை சாயபிப ஆஸ்திகளாகத் தாழ்த்தி வைத்திருந்த கொடுமை சிதறி வெடிக்கக் காத்திருந்த கனிவான காலக்கட்டம் அது. 98% மக்கள் பிராமணரல்லாத தமிழகத்தில் பெரும்பான்மையை ஒன்று திரட்டுவது எளிதானது. ஆங்கிலேயருக்கும், ஆங்கிலத்திற்கும் கொத்தடிமைப்பட்டு அந்த மொழியறிவையே உயர் நாகரிகமாக நினைத்து வந்த தமிழக அறிவு ஜீவிகள் இந்தியை ஏற்பதில் வெறுப்பு காட்டுவது இயற்கை. புதிய இந்தி இங்கு கட்டாயமாக்கப்படும் போது மாணவர்கள் இந்தியை வெறுப்பதும் இயற்கை. இந்த இயற்கையான வெறுப்பே இந்தி எதிர்ப்பு கோஷத்தை வலுவாக்கியது.

பிராமணரல்லாத அதிகார, பதவி சுக விரும்பிகளாகிய தென்னிந்திய பெரும் முதலாளிகளும், மிட்டா மிராசுகளும் அரவணைத்து வளர்த்த கட்சி சுயமரியாதை இயக்கம். இந்தியாவில் வணிக ஆதிக்கம் செலுத்தி வந்த வடநாட்டினரின் கையை வீழ்த்தவே இங்குள்ள பணக்காரர்கள் திராவிட நாடு கோஷத்திற்கு ஆதரவளித்தனர். ஆங்கில வணிக ஏகாதிபத்தியத்தை ஒழிக்க சுதந்திர போராட்டத்திற்கு டாட்டாவும், பிர்லாவும் பணத்தை வாரி விட்டது ஏன்? ஆங்கிலேயன் விட்டுப் போன வணிகத் தலைமையைக் கைப்பற்றத்தானே! இதே நிலை தான் இங்கும்! வட இந்தியரோடு வணிகப் போட்டியில் நிற்க முடியா தென்னிந்திய பெருஞ்செல்வர்கள் அரசியல் ரீதியாக இதனைச் சந்திக்க முயன்றே திராவிட நாட்டு பிரிவினைக்கு ஒத்துழைப்பு நல்கினர்.

இந்த மூன்று கோஷங்களைப் பிரச்சாரம் செய்வதே அண்ணாவின் அரசியல் கொள்கையாக அமைந்தது.

இந்த அரசியல் கொள்கைகளை வைத்து ஆட்சியைப் பிடிக்க அண்ணா முற்பட்டபோது, இக்கொள்கைகளை தீர்த்து மென்மையாக்கி தி.மு.க. அமைத்தார். அது அவரது அரசியல் வாழ்வின் இரண்டாவது கட்டம். (தொடரும்) —— எழில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்:

# பெண்-ஆண் சமத்துவம் 3

பேருந்தில், திரையரங்கில் இன்ன பிற பொது இடங்களில் காணப்படும் 'க்யூ' வரிசையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனி இடம். பெண்களை இடிப்பதில் ஆண்களுக்கு ஒரு விதக் கிளுகிளுப்பு! தொண்ணூறு வயதுப் பாட்டியாக இருந்தாலும், அவளுக்குப் பக்கத்தில் ஓர் ஆண் அமர்ந்து விட்டால்... அப்பப்பா! இது தமிழனின் வளர்ந்த நிலையைக் காட்டுகிறதா? அவனது இழிந்த நிலையைக் காட்டுகிறதா?

நான் பணியாற்றிய டக்கார் பல்கலைக் கழகத்தில், பயிலும் ஆண் மாணவர்க்கும், பெண் மாணவர்க்கும் பொதுவான டாய்லட் வசதிகள்! எத்தகு மனப்பக்குவத்தை ஆப்பிரிக்கர்கள் எய்திவிட்டார்கள் என்பதற்கு இது சான்று!

ஆணுக்கும் பெண்ணுக்கும் செயற்கையான இடைவெளிகளைப் பெருக்கி — கற்பனையில் மூழ்க வைத்து, ஒரு பாலாரை மறுபாலரிடம் ஈர்க்க வைத்து அதனையே கதையாக எழுதி, கதைப் பத்திரிகை நடத்தி, திரையில் காட்டி ஒரு பாலுறவு வாணிகம் நடத்துகிறார்கள் இங்கே!

பெண்ணை மணந்து கொள்ள வரதட்சிணை வாங்கும் ஒரு சமூகத்தை எந்த மடையனேனும், ஒரு நல்ல சமூகம் எனக் குறிப்பிட முடியுமா? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள செயற்கை இடைவெளி அகற்றப்பட்டு, இருபாலாரும், நெருங்கிப் பழகும், பல நாட்டு மக்களிடையே, சாதிப் பிரிவு இல்லை; காதல் மணங்கள் மிகுதி; ஆண் வேலை இது, பெண் வேலை இது என்ற வேலைப் பிரிவு இல்லை. கிட்டத் தட்ட எல்லா வேலைகளிலும் இருவரும் ஈடுபடுகின்றனர்.

அதனால் பஸ்ஸில், ரயிலில், கூட்டத்தில் பெண்ணை இடித்துச் சுகங்காணும், இழி செயல்கள் இல்லை. மண உறவு, வெறும் சதையுறவு என்ற நிலையைத் தாண்டி அது நட்புறவு

FREE E- BOOKS , www.thamizham.net.,

என்ற நிலைக்கு அன்னோர் வந்துவிட்டனர். இங்கோ புனித உறவு என்ற பெயரைப் பொய்யாகச் சொல்லிப் பொய்யாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! பெண்களை விலைப் பொருளாக, அடிமைப் பொருளாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்! நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்! நாம், நம் சகோதரியர்க்கு முழுச் சுதந்திரம் அளித்து விட்டோமோ? இல்லை. சத்தியமாக இல்லவே இல்லை. — அறம்

முற்றும்

(முழு நூல் அச்சாகிறது. ஜூன் 85 இல் சென்னைப் பாரி நிலையத்தில் கிடைக்கும்)


## எந்த ஐயத்திற்கும் பதில் - 2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்

✷ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக

✷ "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?

✷ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?

✷ வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?

✷ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம் எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச் செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி:—

மைதிலி மோகன்,
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053


FREE E- BOOKS , www.thamizham.net.,

# நடைபாதைகளில் கோயில்களா?

போக்குவரத்து மிகுந்த சாலைகளில் அதுவும் நெருக்கடி வேளைகளில் நடைபாதைக் கோயில்கள் பாதசாரிகளுக்கு மாபெரும் இடையூறுகள். உற்சவ நாட்களிலோ இக்கோயில்களிலிருந்து ஒலி பெருக்கப்பட்டு வெளிவரும் பக்திப் பாடல்களும், உடுக்கை ஒலிகளும் வாகனங்களின் ஹாரன் ஒலியையே அமுக்கி விடுவதால் சாலை விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன.



இன்றைய நிலைமையில் மதவாதிகள், அரசியல்வாதிகளின் எதிர்ப்புகளைச் சமாளித்து இவற்றை இடித்துத் தள்ளி நடைபாதைகளைச் செம்மைப்படுத்துவது உண்மையிலேயே ஒரு வீரச் செயல்தான். இப்படியொரு வீரச் செயலைக் கடந்த மார்ச் மாதம் 17ம் தேதி பம்பாயில் திரு. கயிர்னார் என்ற போலீஸ் அதிகாரி செய்து காட்டியுள்ளார். துணிவுமிக்க 50 உள்ளாட்சி அதிகாரிகள், உண்மையான 90 காவல் துறையினர் கொண்ட படை இவரது தலைமையில் ராட்சத பளுதூக்கிகள், சுத்திகளைக் கொண்டு ஒரே இரவில் 12 நடைபாதைக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கியது. இக்கோயில்களின் புராதனப் பெருமைகளைப் பற்றியெல்லாம் இவர் கவலைப்படவில்லை. இந்து, கிறிஸ்தவ, முகமதியக் கோயில்கள் என்று பிரித்துப் பார்க்கவில்லை.

மதவாதிகளும், அரசியல்வாதிகளும், மதவெறியர்களும் என்ன முயன்றும், இவரைக் குற்றவாளியாக்க முடியவில்லை. காரணம் இக் கோயில்கள் சமூகவிரோத சக்திகளின் புகலிடமாக விளங்கி வந்தன. நடைபாதை தர்கா ஒன்று

FREE E- BOOKS , www.thamizham.net.,

இளைஞர்களுக்குப் போதைப் பொருள் விற்பனை செய்யும் கேந்திரமாக விளங்கி வந்தது அம்பலமாகியது. சாயிபாபா கோயில் ஒன்றில் உண்டியல் தொகையை வைத்து வியாபாரம் நடைபெற்று வந்தது. இந்த கோயில் உண்டியலில் தினமும் ரூ.200 முதல் ரூ.250 வரை வசூலாகியது. நூறு ரூபாய்க்கு 5 பைசா முதல் 50 பைசா வரை சில்லறைகளாகப் பெற ரூ.25 தர வேண்டுமாம். ஆக ஒரு நாளைக்கு உண்டியல் தொகை மூலம் இக்கோயில் ரூ.50 லாபம் சம்பாதிக்கிறது. நடைபாதைக் கிறிஸ்தவ கோயில்களில் நவ நாள் செபக்கூட்டங்களுக்கு வரும் மக்கள் திரளும் அவர்களுக்காக தோன்றும் நடைபாதைக் கடைகளும் பாதசாரிகளுக்கும், சாலை போக்குவரத்துக்கும் மிகுந்த தொல்லை கொடுத்து வந்தன.

'நான் என் கடமையைத் தான் செய்கிறேன்' என்று கூறி நடைபாதைகள் மக்களுக்குத் தான், மகேசன்களுக்கு அல்ல என்பதை நடைமுறைப் படுத்திய இந்த உண்மையான காவல் துறை அதிகாரிக்கு மராட்டிய மாநிலத்தின் அறிவு ஜீவிகளும், சமூக முன்னேற்றத்தில் அக்கறையும், விழிப்புணர்வும் கொண்ட சங்கங்களும் ஒன்று சேர்ந்து முழு ஒத்துழைப்பும் ஊக்கமும் தந்து வருகின்றன.

—— நிலா

திருத்தம்: சுட்டி 50 இல் இன்குலாப் கட்டுரையில் மன்ற பூராசு தேதியை 20.3.85 ஆக திருத்தி வாசிக்க.

50 திங்களாக அரும் தொலைபேசி: 24325

பணி ஆற்றிய சுட்டி இதழுக்கு எங்கள் இதயம் கனிந்த

வாழ்த்துக்கள்

ஸ்டார் பேப்பர் மார்ட்

48, மலையப் பெருமாள் தெரு

சென்னை — 1.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கொடுமை! கொடுமை!!



மூன்றே வயது நிரம்பிய இளம் பாலகனுக்கு முருகனைப் போல அலங்காரம் செய்து, ஒரு கையில் வேல், ஒரு கையில் விபூதித் தட்டு கொடுத்து வேகாத வெயிலில் நிற்க வைத்திருக்கிறார்கள். ஈவு இரக்கமற்ற பெற்றோர்கள் இது போன்ற காட்சிகளைத் திருத்தணி படிகளில் காணலாம். இதைப் பார்க்க சகிக்காமல், ஒரு சமயம் கூச்சல் போட்டு கூட்டம் சேர்த்தேன். பக்கத்து வீட்டிலிருந்து அம்முருகனின் பெற்றோர் வந்தனர். பெரிய கலாட்டாவுக்குப் பின் நிழலில் உட்கார வைக்க ஒத்துக் கொண்டனர். அவ்வளவு தான் என்னால் முடிந்தது.

இன்னொரு சின்ன பையன்: இரு கன்னமும் ஒரே புண்ணாகி இருந்தது. நான் சந்தேகப்பட்டு கேட்கவே, 'போன கிருத்திகைக்கு வேல் போட்டது' என்றான். இன்னொரு ஆள்: அவன் முதுகில் 12 இரும்பு முட்களைக் குத்தி மாட்டி அதில் ஒரு சிறு தேரை அலங்கரித்திருக்கிறார்கள். இன்னொருவன் தன்னை மதுரை வீரன், சாட்டை வீரன் என்று சொல்லிக் கொண்டு, நீண்ட சாட்டையால் பளார், பளார் என்று தன்னையே அடித்துக் கொள்கிறான். முதுகு தோள் எல்லாம் ரத்த விளாறாக இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு நாள் இரவு பஜனையில் பார்த்தேன். தலையிலும் முகத்திலும் பெரிய தீப்பந்தத்தை உருட்டிக் கொண்டிருக்கிறான். இன்னொருவன் நெருப்பாய் சுடும் நடுவீதியில் 'கோவிந்தா' என்று சொல்லி, உருண்டு புரண்டு காணிக்கைச் சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

சித்திரவதை தெய்வத்தின் பெயரால் அங்கீகரிக்கப்படுகிறதே! தெய்வத்தின் சக்தியைக் காட்டுவதற்கு இந்த மாதிரி கொடுமைகள் எல்லாம் தேவை தானா? இவற்றைத் தடுக்க ஒரு சட்டம் இல்லையா? கோயில் நிர்வாகம் செய்யும் இந்து அறநிலைய பாதுக்காப்பு துறை, இந்தக் கொடுமைகளிலிருந்து மதத்தையும் கடவுளையும் விடுவிக்க பாடுபடுமா?

— க. பூபதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# 9 தூக்குமேடையில் பகத்சிங்

வட இந்தியாவில் பகத்சிங் விடுதலைப் போராட்டத்தில், புதிய போக்கை கடைப்பிடித்த போது 'பிரிட்டன் அரசு வன்முறையின் வடிவமாக இருக்கும் போது அதனை அழிக்க புரட்சிகர வன்முறையே சரியான வழி' என இளைஞர்களைத் திரட்டியபோது — தமிழ்நாட்டில் இதற்கு எதிரொலி எப்படி இருந்தது? பத்திரிகைகள் ஆதரித்து எழுதினவா? 26.3.1931 குடியரசு இதழ் பகத்சிங் பற்றி எழுதிய தலையங்கத்திலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்:

## பகத்சிங் நடந்து கொண்டது சரிதான்!

"இந்தியாவுக்கு பகத்சிங் கொள்கை தான் உண்மையாக வேண்டியது என்பது நமது பலமான அபிப்பிராயமாகும். ஏனெனில், நாமறிந்தவரை திரு. பகத்சிங்கிற்கு சமதர்மமும், பொது உடைமையும் தான் அவரது கொள்கையென்று கருதி இருக்கிறோம். இதற்கு உதாரணம் என்னவென்றால், திரு. பகத்சிங் பஞ்சாப் கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் கீழ் கண்ட வாக்கியம் காணப்படுகிறது அதாவது, 'பொது உடைமைக் கட்சி அதிகாரம் பெற்று, ஜனங்களுக்குள்' வித்தியாசமான அந்தஸ்துகள் இல்லாமல் இருக்கும்வரை எங்கள் யுத்தம் நடந்து கொண்டு தானிருக்கும். எங்களைக் கொல்வதோடு இந்த யுத்தம் முடிந்து விடாது; அது பகிரங்கமாகவும், ரகசியமாகவும் நடந்து தான் தீரும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அன்றியும், அவர் கடவுள் விஷயத்திலும், "எல்லாம் கடவுள் செயல்" என்பதிலோ நம்பிக்கை இல்லாத தன்னம்பிக்கையுடையவர் என்றும் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆகவே அவரது இந்தக் கொள்கையானது எந்தச் சட்டத்தின் படியும் குற்றமாகக் கூடியது அல்லவென்றும், ஆவதாயிருந்தாலும் கூட யாரும் பயப்பட வேண்டியதில்லை

FREE E- BOOKS , www.thamizham.net.,

என்றும் சொல்லுவோம் ஏனென்றால் இதனால் பொது மக்களுக்கு எவ்வித நஷ்டமோ, கஷ்டமோ ஏற்பட்டு விடாது என்று உறுதி கொண்டிருக்கிறோம். அந்தப்படி ஒரு சமயம் ஏதாவது ஏற்படுவதாயிருந்தாலும் நாம் நம் மனப்பூர்வமாய் யாதொரு தனி மனிதனிடமாவது தனி வகுப்பினிடமாவது, தனி தேசத்தினிடமாவது துவேஷம் இல்லாமலும் எந்தத் தனி மனிதனுடைய தேகத்திற்கும் துன்பமுண்டு பண்ணாமலும் நம்மை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் கஷ்டப்படுத்திக் கொள்ளவும் சம்மதிக்கின்றதான தியாக தன்மையுடன் இருந்து கொண்டு தான் இக்கொள்கையை நிறைவேற்ற முயற்சிக்கிறோம். ஆதலால் தான் நாம் எதற்கும் கவலைப்படவோ, பயப்படவோ வேண்டியதில்லை என்று சொல்லுகின்றோம்.''

துப்பாக்கியால் சுட்டு விட்டு மறைந்த பகத்சிங்கும், ராஜகுருவும் என்ன ஆனார்கள்? அடுத்து நடந்த நிகழ்வுகள் முக்கியமானவை. (இன்னும் வரும்)

**திருமண அறிவிப்பு: சிக்கன முறை:**

சுட்டி திருமண முறையைக் கடைப்பிடித்த சுட்டி வாசகர் பணிக்கனூர் பி.பி. சம்பத் அவர்களின் மகள் திருமண அழைப்பிதழ் கீழே:

## திருமண அறிவிப்பு

பெருந்தகையீர்.

[illegible] 12—9—1984 [illegible] 9-15 மணியளவில்

எனது புதல்வி

**பூரணிக்கும்**

[illegible] S. P. [illegible]

**S. R. விஜயன்**, B. Sc., க்கும்

[illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

P. D. சம்பத்

பணிக்கனூர், [illegible] (P. O.)

[illegible] (Via), [illegible] (Dt.)

**முன்பு அறிவித்தபடி மணமக்களுக்கு ஆயுள் முழுவதும் சுட்டி அனுப்பப்படும்.**

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆகாத அகம்பாவம்

அரசு துறைகளிலாகட்டும், தனியார் துறைகளிலாகட்டும் வேலை செய்கின்ற நடுத்தர (கிளார்க், காஷியர், சேல்ஸ்மேன் போன்ற) நாலாந்தர (பியூன், அட்டெண்டர், டிரைவர் போன்ற) வேலையாட்கள் பெரும்பாலோர் தங்களை ஏதோ அந்த நிறுவனத்தின், முதல் போட்ட ஏகபோக உரிமையாளர்கள் போலவும், வருகின்ற நுகர்வோர் அவர்கள் தயவை நாடி வந்து யாசிக்கின்றனவர்கள் போலவும் முட்டாள்தனமாக எண்ணிக்கொண்டு தலைக்கு மீறின அகம்பாவத்துடனும், ஏகத்தாளத்துடனும், ஆணவத்துடனும், திமிருடனும் நடந்து கொள்கிறார்கள். வருகின்ற நுகர்வோரை செத்த எலியைப் பார்ப்பது போல் பார்ப்பதும், ஏளனமாக எடுத்தெறிந்து பேசுவதும், வீணாக அலைக்கழிப்பதும், தன் அப்பன் வீட்டு சொத்தை எடுத்து கொடுப்பது போல் சலித்துக் கொள்வதும் ரத்தத்தைக் கொதிப்பேற்றுகிற விஷயங்கள்.



வருகின்ற ஒவ்வொரு நுகர்வோரும் தான் இந்த வேலைக்காரனும் அவன் பெண்டாட்டி பிள்ளைகளும் தின்கின்ற ஒவ்வொரு வேளை சோற்றையும் போடுகின்றவர்கள். அவன் போட்டுக் கொண்டு கொழிக்கின்ற வண்ண வண்ண சட்டைகளைக் கொடுப்பவர்கள். அவன் அனுபவிக்கின்ற ஒவ்வொரு பைசாவையும் அவனுக்கு சம்பளமாக கொடுப்பவர்கள் என்கின்ற உண்மையை இந்த மாதிரி வேலை செய்கின்ற அரைவேக்காட்டு அறிவிலிகள், புரிந்து கொண்டு இந்த ஆகாத அகம்பாவத்தை ஒழித்து தன் வயிற்றுப் பிழைப்புக்காக ஒப்புக் கொண்டு இந்த வேலையை செய்கின்றோம் என்கிற எண்ணத்துடன் வருகின்ற ஒவ்வொரு நுகர்வோரிடமும் பணிவுடனும், பண்புடனும் அடக்கத்துடனும் வேலை செய்யவேண்டும்.

— சுபராஜ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ARCHANA FINANCES

ACCEPTS DEPOSITS ON THE FOLLOWING TERMS:

| ONE YEAR | TWO YEARS | THREE YEARS |
|---|---|---|
| 21% | 21.5% | 22% |

MINIMUM DEPOSIT RS. 2000/-

- further amounts in multiples of Rs.1000/-
- Interest payable Quarterly.

ARCHANA FINANCES,
Regd. OFF
2. NEW TANK STREET,
NUNGUMBAKKAM,
MADRAS-600034.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# "வாசகர் எதிரொலி"

"பெரியார் என்றாவது ராஜா ராஜனைப் பாராட்டியதாக இவர்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்கிறார் இன்குலாப். அவர் என்றைக்கு — எந்தத் தமிழனை (மன்னனும் சரி மக்களும் சரி) பாராட்டியுள்ளார். எந்தத் தமிழ் நூலைப் பாராட்டியுள்ளார்? அவர் பாராட்டு இது தான் "தமிழ் காட்டு மிராண்டி மொழி! தமிழன் காட்டு மிராண்டி" அதை விட ஒரு படி மேலே சென்று ஆங்கில மொழியைப் பாராட்டியுள்ளார்! ஆங்கிலே யனைப் பாராட்டியுள்ளார்! சுதந்திர நாளைத் துக்க தினமாகக் கொண் டாடச் சொன்னவர்! சரித்திரம் சான்று பகரும்.

— க. சாமி நாதன்,
திருவண்ணாமலை.

50 வது இதழ மிகச் சிறப்பாக இருந்தது. சிறுகதைப் போட்டிக்கு 102 சிறுகதைகளே வந்தன என்று குறிப்பிட்டிருந்தீர்கள். சமுதாய விழிப்புணர்ச்சியுடன் எழுதுபவர்கள் இவ்வளவு குறைவா? கவிதைகளே இல்லாதது மிகப் பெரிய குறையாகத் தெரிகிறது. கட்டியின் 100வது இதழை எதிர் பார்க்கிறேன்.

— எஸ்.எ. சுகுமாரன், தூத்துக்குடி.

'அண்ணா என்கிற மனிதர்' புதிய தொடர் அண்ணாவைப் பற்றிய உண்மையான விருப்பு. வெறுப் பில்லாத நடுநிலையான ஆராய்ச்சி யாக அமையும் என்பது முதல் அத்தி யாயத்திலேயே புலனாகிறது.

— ம. வீரமுத்து, சிறுகண்பூர்.

பட்ஜெட் கார்டூன் அருமை. சுயநிதி கல்வி நிறுவனங்கள் பற்றிய கட்டுரை படித்தேன்! வியாபாரம் என்ற அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்படுகின்ற இந்தக் கல்வி நிறுவனங்களின் செயல்முறைகள் பகற்கொள்ளையை விடக் கொடுமை யானவை. உரிய முறையில் கல்வி கற்பிப்பதை விட, ஒவ்வொருவரிடமி ருந்தும் எந்த விதத்தில் பணம் பறிக்க முடியும் என்ற நோக்கில் தான் இவை செயல்படுத்தப்படுகின்றன.

— எம். சம்பத், வேலாயுதம் பாளையம்.

மின்சார வாரியம் குறித்த செய்தி யில் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. விஜயராகவன் அவர் களைப் பற்றிச் சற்று கடுமையாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். வாரிய ஊழியர்கள் எல்லோரும் ஏதோ தர்ம புத்திரர்கள். அப்பாவிகள் என்பது போல! மக்களிடம் விசாரியுங்கள். இந்த ஊழியர்களால் படும் அவஸ்தை புரியும்.

— லோகராஜ், ஆலந்தூர்—16

• சென்ற இதழை விமர்சித்து எழுதிய அத்தனை வாசகர்களின் கடிதங்களும் படித்துப் பார்த்து ஆசிரியர் குழுவால் விவாதிக்கப் பட்டன. எழுதியவர்களுக்கு நன்றி. மாதிரிக்கு சில கடிதங்களையே வெளியிட முடிகிறது. வெளி யிடா கடிதங்கள் யாவும் வெளி யிடும் தரம் வாய்ந்தவையே. வாசகர் கள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் விமர்சித்து எழுத அழைக்கிறோம்.

FREE E-BOOKS , www.thamizham.net.,



1

நூற்றாண்டுகளாக சுரண்டப்பட்டும், அழுத்தப்பட்டும் கிடந்த
*உலகத் தொழிலாளர்களே*
*ஒன்றிணையுங்கள்*





2

எழுந்தனர் தொழிலாளர்
*உலகத் தொழிலாளர்களே*
*ஒன்றிணையுங்கள்*



3

இன்று நாம் மாபெரும் சக்தி
*உலகத் தொழிலாளர்களே*
*ஒன்றிணையுங்கள்*



4

நாளை வெற்றி நமதே!
*உலகத் தொழிலாளர்களே*
*ஒன்றிணையுங்கள்*

1984 ல் தொழிலாளர் ஒற்றுமை பற்றிய மிகச் சிறந்த கருத்துப் படமாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' தேர்ந்தெடுத்தது.

ஓவியர்: சௌமித்ரா ரணடே


ஆசிரியர்: தி. நாராயண பாரதி; வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494, அண்ணா நகர், சென்னை-600040.
அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரக் பிரஸ், 157, Dr. நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, MS-5.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

வட்டு: மலர் இதழ் 1 MAY 1985 Regd. No. TN/MS(N)/31
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarca production with innovative technology and the farmers have achiev a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonn to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distrib ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousar farmers (a bulk of Whom are small and marginal farmers) and generati gainful rural employment to over fifty thousand families in the primar secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development p grammes (I) Sakthi High School Provides a conducive environment f study and development of rural children. (II) Sakthi Institute of Techn logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasa Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E- BOOKS , www.thamizham.net.,